[திரு. சி. பொன்னையன்] [2002 மார்ச் 27

மேசையைத் தட்டும் ஒலி) முதல் கட்டப்பணிக்கு ரூ.2772 கோடி செலவாகும். இதுபற்றிய விவரங்கள் கணக்கிடப்பட்டு வருகின்றன.

84. தமிழ்நாட்டில் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தவும், குறிப்பாக வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கும், சுற்றுலாத் தொழிலுக்கு புதுவடிவம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தென் இந்தியாவிலேயே, சுற்றுலாப் பயணிகள் அவசியம் வந்து, தங்கிப் பார்க்கக்கூடிய ஈர்ப்புசக்தி மிக்க சுற்றுலா மையமாக சென்னையை உருவாக்குவதற்கு, பன்னாட்டு மற்றும் தேசிய சுற்றுலா கருத்தரங்குகளை நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கர்நாடகம் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் அரசு சுற்றுலா நிறுவனங்களுடன் சுற்றுலாப் பயணிகள் பரிமாற்றத் திட்டங்கள் மற்றும் விற்பனை, விளம்பரம் உள்ளடக்கிய சுற்றுலா வளர்ச்சிக்கான உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டிற்குச் சுற்றுலாத் துறைக்கு ரு.25 கோடியாக உயர்த்தி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

எழுத்தறிவு மற்றும் தொழில் நுட்ப அறிவு

85. இம்மாநிலத்தில் தொடக்கக் கல்வி மற்றும் பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்குத் தேவைப்படுகிற சில முக்கிய நடவடிக்கைகளை நாங்கள் இனம் கண்டுள்ளோம். அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பதற்கான சிறப்பு நடவடிக்கைகள், பள்ளிப்படிப்பை இடையிலேயே நிறுத்திவிடாமல் தடுப்பது, பாடத் திட்டத்தின் தரத்தை உயர்த்துவது. பள்ளி கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து பணியில் ஊக்குவித்தல், குறைந்தபட்ச கல்வி கற்றலை உறுதிசெய்தல், பள்ளிகளின் நிருவாகத்தில் பெற்றோர்களையும் பெருமளவு ஈடுபடச் செய்வது ஆகியன இந்நடவடிக்கைகளில் அடங்கும்.

86. அடுத்த நிதியாண்டில் 17 மாவட்டங்களில் சில குறிப்பிட்ட குடியிருப்புப் பகுதிகளில் 252 கல்வி மையங்களில் "கல்வி உத்தரவாதத் திட்டம்" செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் 6000க்கும் அதிகமான குழந்தைகள் பயனடைவர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இடையில் பள்ளிப்படிப்பை நிறுத்திவிடும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கத்துடன், "மாற்று-புதுமைக் கல்வித் திட்டம்" என்ற மற்றொரு திட்டமும் 21 மாவட்டங்களில் 1622 கல்வி மையங்களில் செயல்படுத்தப்படும்.

2002 மார்ச் 27] [திரு. சி. பொன்னையன்]

*இத்திட்டத்தின் மூலம் மாநிலத்தில் **61,305** குழந்தைகள் பயனடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

87. ஆளுநர் உரையில் அறிவித்தவாறு, வாழ்க்கைத் தொழில் பயிற்சிப் பள்ளிகள் அடுத்த நிதியாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்படும். இப்பயிற்சிப் பள்ளிகளைத் துவக்குவதற்காக 2002-2003 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் முதற்கண் ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் குறித்து மதிப்பீடு செய்து விரிவான திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்து, அடுத்த நான்கு ஆண்டுகளில் அப்பள்ளிகளுக்குத் தேவையான நிதியுதவியை அளிப்பதற்கான வழிமுறைகளைப் பள்ளிக் கல்வித்துறை வகுக்கும்.

நாட்டுப்புற, பாரம்பரிய மற்றும் நவீனக் கலை, பண்பாடு, நாடகம்

88. இம்மாநிலத்தின், சமுதாயம், பண்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைச் சித்தரிக்கும் வகையில், "அமைதிப் பூங்கா" ஒன்றை சென்னை மாநகரை ஒட்டி அமைக்க அரசு கருதியுள்ளது. இதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.50 இலட்சம் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த நினைவுச் சின்னத்தின் வடிவமைப்பு மற்றும் அமையவிருக்கும் இடம் பற்றி முடிவு செய்த பின்னர், 2002 ஆம் ஆண்டு மத்தியில் இதற்கான பணி தொடங்கப்படவுள்ளது.

89. தமிழ்நாடு வெவ்வேறு பண்பாட்டுச் சிறப்புகளையும் பாரம்பரியத்தையும் தன்னகத்தே பெருமையுடன் கொண்டுள்ளது. இவற்றைப் போற்றி பேணி பாதுகாப்பது அவசியம் ஆகும். இம்மாநிலத்தின் மரபுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காக நிறைவேற்றப்பட வேண்டிய பல்வேறு திட்டங்களுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் அரசு ரூ.4 கோடி ஒதுக்கியுள்ளது.

பாலின நேர்மை நெறி (Gender Equity)

90. அடுத்த நிதியாண்டில், கல்வி, சுயவேலைவாய்ப்பு, பயிற்சி ஆகியவற்றிற்குத் தக்க வாய்ப்புகள் அளிப்பதன் மூலமாக, பெண்களுக்கு சமூக-பொருளாதார உரிமைகளை வழங்குவதில் அரசு தனி கவனம் செலுத்தும். சிறப்பு வாய்ந்த "தொட்டில் குழந்தைத் திட்டம்" நாடெங்கிலும் பெருவாரியான ஆதரவைப் பெற்றுள்ளது. பெண்